**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 15 /2020**
**U/s. 294(b),323,324,506(2) ,341 of IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW.1 )**

| | | |
|---|---|---|
| **Name** | : சிவராமராவ் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

எதிரிகள்ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர், செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 15/2020 24.10.2025</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்:**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சை கீழராஜவீதி கொண்டிராஜபாளையம் என்ற முகவரியில் குடியிருந்து தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 09.09.2019 ம் தேதி 7.30 மணியளவில் நான் எனது வீட்டிற்கு எதிரே உள்ள கொண்டிராஜபாளையம் நின்று கொண்டிருந்தேன். அங்கு 3 நபர்கள் ஆஜர் எதிரிகள் இருவரும் அதில் ஒருவர் இறந்துவிட்டார் ஆகியோர்கள் அங்கு வந்தார்கள். வாசு என்ற நபர் அடிக்கடி என்னிடம் பிரச்சனை செய்து கொண்டிருந்தார். எனது சகோதரிடமும் இதே காரணத்தை கொண்டு இரு நபர்களை அழைத்து வந்து தீடிரென இடுப்பில் வைத்திருந்த அருவாளை எடுத்து ஆறுகுட்டி என்பவர் எனது முதுகின் பின்பகுதியில் வெட்டி விட்டார். எனக்கு இரத்தபோக்கு அதிகமாக இருந்ததால் எனது அம்மா உதவியுடன் MVK மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். பின்னர் மருத்துவமனைக்கு காவலர் வந்து விசாரித்தனர். போலீசார் என்னை விசாரித்தார்கள். **என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** சம்பவம்நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 7.30 மணி என்றால் சரிதான். என்னுடைய வீட்டிலிருந்து கிழக்கு காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். அதே போன்று MVK மருத்துவமனைக்கு 15 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்று சொன்னால் சரிதான். ஆஜர் எதிரிகளில் வாசு என்பவரை மட்டும் தான் எனக்கு தெரியும். மற்ற இரண்டு எதிரிகளை போலீசார் கூறியதன் அடிப்படையில்தான் தெரியும் என்றால் சரிதான். 8.20 மணியளவில் நான் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டேன் என்று

சொன்னால் சரிதான். என்னை மருத்துவமனைக்கு அம்மா மற்றும் அப்பா அழைத்து சென்றார்கள் . நான் மருத்துவமனைக்கு இரவு 9.00 மணியளவில் அனுமதிக்கபட்டேன் என்றாலும் வழக்கிற்காக இரவு 8.20 என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னிடம் இரு முறை விசாரணை செய்தார்கள் . போலீசார் என்னை விசாரித்ததேதி ஞாபகமில்லை. புகாரை நான் சொல்ல சொல்ல தான் போலீசார் எழுதினார் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது சுயநினைவுடன் தான் இருந்தேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான்.

2. புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து மட்டும் செய்தேன் என்றாலும் அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற் ஏற்றறாற்போல் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவயிடம் பேருந்து நிறுத்தம் கரடுமுரடான பகுதி என்றும் அதில் நான் தவறி விழுந்தால் தான் மேற்படி காயம் ஏற்பட்டது என்றும் எதிரிக்கும் எனக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ நடந்தது என் வீட்டிற்கு எதிர் பக்கத்தில் நடந்தது. நான் புகார் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த இடம் என்வீட்டிற்கு எதிர்ப்புறம் என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆனால் போலீசார் என்னை விசாரித்தபோது சொன்னேன். அவ்வாறு நான் புகாரிலும் , போலீசார் வாக்குமூலததிலும் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனது சட்டை முழுவதும் இரத்தம் இருந்தது என்று சொன்னால் சரிதான். புகைப்படத்தை போலீசாரிடம் காட்டினேன். இது குறித்து நான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் பதட்டத்தில் சொல்லவில்லை. அவ்வாறு நான் புகாரிலும் , போலீசார் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(1 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் 3 வது எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக கூறினார். )**

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.